# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00 மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)



பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

## தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தன்னம்பிக்கைத் தமிழ் |
| பொருள் | : | தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனை தொடர்பான கட்டுரைகள். |
| பதிப்பாசிரியர் | : | முனைவர்.ச.மகாதேவன்<br>தமிழ்த்துறைத் தலைவர் |
| இணைப்பதிப்பாசிரியர்கள்: | | திரு.அ.மு.அயூப்கான்<br>இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>முனைவர் அ.சே.சேக்சிந்தா<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை<br>திரு.ஜெ.குமார்<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை |
| பதிப்பு | : | செப்டம்பர் 2016 |
| உரிமை | : | தமிழ்த்துறை,<br>சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி) |
| ISBN | : | 938597756-3 |
| மொழி | : | தமிழ் |
| தாள், அளவு | : | காப்பியர், |
| பக்கங்கள் | : | 92 |
| விலை | : | ரூ.170/– |
| வெளியீடு | : | ஷான்லக்ஸ் பதிப்பகம்<br>61/66, வி.பி.காம்ப்ளக்ஸ், டி.பி.கே.மெயின் ரோடு<br>மதுரை |
| கணினி அச்சாக்கம் | : | கா.மானேந்தியப்பன்<br>காசி கணினிக் கலையகம்<br>41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை<br>கைபேசி : 9443614556 |


Scanned with CamScanner

# பாரதிதாசன் படைப்புகளில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

முனைவர் சி
சொர்ணமாலா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற இலக்கியப் படைப்பாளர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். சமுதாய மாற்றங்களையும் தனிமனிதச் சீர்திருத்தங்களையும் சமூக அக்கறையுடன் சுட்டிக்காட்டியவர். கல்வி பேச்சுரிமையைக் கொடுக்கும்; பேச்சுரிமை அச்சத்தைப் போக்கும்; அச்சம் போயின் புதியதோர் உலகு படைக்கலாம் என்பதான சிந்தனையில் இவரின் படைப்புகளில் விரவிக் கிடக்கும் தன்னம்பிக்கைச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கல்விச் சிந்தனை**

'கேடில் விழுச்செல்வம் கல்வி'என்ற வள்ளுவரின் கூற்றிற்கு இணங்க அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் இச் சமூகத்தைச் சீர் தூக்கி நிறுத்தும் ஆயுதமே கல்விச் செல்வம். இத்தகு கல்விச் செல்வத்தினை ஒரு ஆண் பெற்றால் அது அவனுக்கு மட்டும் தான் பயன்படும். ஆனால் ஒரு பெண் பெற்றால் இச் சமூகமே பயன் பெறும். ஏனெனில் மனிதனின் தன்னம்பிக்கையை வளரச் செய்யும் கருவி கல்வி. இதனால் பகுத்தறிவுத் தூண்டப்பெற்று மனித மனமும் வளம்பெறும். அதனால்தான் விவேகானந்தர்,

"எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் காலில் நிற்கும்படிச் செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வி" என்று தன்னம்பிக்கையின் பிறப்பிடமே கல்வி என்பதைப் பதிவு செய்துள்ளார். இதைப் பாரதிதாசனும் தம் படைப்புகளில் ஆழப்பதித்துள்ளார். மனித மனம் சீர்பெறக் கல்வி அவசியம். ஏனெனில் கல்விதான் ஒரு சமூகத்தில் அறிவு வெளிச்சத்தைக் கொண்டு வரும் என நம்பினார் பாரதிதாசன். அதுவும் பெண்கல்வி மிக அவசியம் என்பதை வலியுறுத்தினார். 'தலைவாரி பூச்சூடி பாடசாலைக்குப் போ' என்கிறாள் ஒரு தாய், தன் மகளிடம். அப்பொழுது அழுகின்ற மகளிடம்,

> **"படியாத பெண்ணாயிருந்தால் - கேலி**
> **பண்ணுவார் என்னை இவ்வூரார் - தெரிந்தால்**
> **கடிகாரம் ஓடு முன் ஓடு"**

என்று தந்தையின் கூற்று வழி பெண் கல்விக்கு வித்திடுகிறார் பாரதிதாசன். பெண் குழந்தைத் தாலாட்டில் தொடங்கி அவர் படைத்த காப்பியங்கள் வரை அனைத்திலும் பெண் கல்வியை வலியுறுத்தும் இவர், புரட்சிக்கவியில் அமுதவல்லியின் கல்வி நிலை குறித்துக் கூறுமிடத்து,

> **"தமிழிலக்கியங்கள் தமிழிலக்கணங்கள்**
> **அமைவுற ஆய்ந்தாள், அயல்மொழி பயின்றாள்**
> **ஆர்ந்த ஒழுக்கநூல் நீதிநூல் அறிந்தாள்" (ப.29)**

என்கிறார். தாய்மொழியை அறிதல் மட்டுமின்றி அயல்மொழியையும் கற்றல் அனைவருக்கும் நன்மைதரும். அதனால்தான் அறியாமையைப் போக்குவதற்கும் சமத்துவம் பேணுவதற்கும் கல்வி இன்றியமையாதது. 'புரட்சிக் கவி'யில் உதாரன், அமுதவல்லி ஆகியோர் புலமை பெற்றவர்களாகவும், கற்ற கல்வியால் அறிவும் தன்னம்பிக்கையும் உடையவர்களாகவும்

Scanned with CamScanner